Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 59/2024

2025-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 5 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 5 | தொழில் | - | ஓட்டுநர் |
| பெயர். | - | ஞானவேல் | வட்டம் | - | கண்டாச்சிபுரம் |
| த/பெ. | | பெருமாள் | சமயம் | - | |
| கிராமம் | - | நாச்சிகுப்பம் | வயது | - | 44 |

12.09.2025

1, 2 எதிரிகள் ஆஜர்

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது நாச்சிகுப்பம் கிராமத்தில் வசித்து ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1, 2 ஐ தெரியும். எதிரிகளை தெரியும். சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு மாலை 06.00 மணியளவில் நான் வீட்டிற்கு வந்த போது அ.சா.1 ற்கு தலையில் காயம் ஏற்பட்டுரத்தம் வந்துகொண்டிருந்தது. அ.சா.2 மருத்துவமனைக்கு அழைத்துச்செல்லுமாறு கூறினார். நான் காயமடைந்த அ.சா.1 ஐ திருக்கோவிலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காகசேர்த்தேன். அ.சா.1 ற்கு எப்படி காயம் ஏற்பட்டது என்று தெரியாது. நான் சண்டையை நேரடியாக பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

1. கடந்த 02.05.2016 ம் தேதி மாலை 06.30 மணியளவில் நான் முருகன் வீட்டருகே இ,ருந்தேன் என்றாலும், அப்போது எதிரி சேகர் அ.சா.1 ஐ அசிங்கமாக பேசி கருங்கல்லால் அவரின் தலையில் குத்தி, முடியை பிடித்து இழுத்து கீழே தள்ளி கொலை மிரட்டல் விடுத்தார் என்றாலும், எதிரி லீலா அ.சா.1 ஐ அசிங்கமாக பேசி கையால் மார்பில் குத்தி, காலால் எட்டி உதைத்தார் என்றாலும், மறிக்க சென்ற அ.சா.2 ஐ எதிரி சேகர் மூக்கிலும்,

தலையிலும் கையால் அடித்தார் என்றாலும், மே-லும் எதிரி சேகர் இரும்பு பைப்பால் அ.சா.1ன் தலையில் அடித்து கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டினார் என்றால் சரியல்ல.

2.மேற்படி சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக போலீசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எ**திரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** - இல்லை.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 59/2024

2025-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 6 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 6 | தொழில் | - | விவசாயம் |
| பெயர். | - | கண்ணன் | வட்டம் | - | கண்டாச்சிபுரம் |
| த/பெ. | | முருகேசன் | சமயம் | - | |
| கிராமம் | - | நாச்சிகுப்பம் | வயது | - | 65 |

12.09.2025

1, 2 எதிரிகள் ஆஜர்

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது நாச்சிகுப்பம் கிராமத்தில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1, 2 ஐ தெரியும். எதிரிகளை தெரியும். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள கையெழுத்து என்னுடையது போல் தெரியவில்லை. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. சம்பவம் நடக்கும் போது நான் சென்னையில் இருந்தேன். மூன்று நாள் கழித்து தான் ஊருக்கு வந்தேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

1. கடந்த 09.05.2016 ம் தேதி 13.00 மணியளவில் சண்டை வழக்கு சம்மந்தமாக போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தார்கள் என்றாலும், அவர்கள் விசாரணைக்கு நான் சாட்சியாக இருந்து அவர்கள் தயார் செய்த பார்வை மகசரில் சாட்சி கையொப்பமிட்டேன் என்றால் சரியல்ல. தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எ**<u>திரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** - இல்லை.

**(Sd/-R.Senthilkumar)**
**D.M-cum-JM,**
**T.V.Nallur.**